பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 25 வியாழக்கிழமை 13.10.2022 கதிர் 229

## “வன இலாகாக்குரிய காணியாக இருந்தாலும் விவசாயம்செய்யமுடியும்”

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு




வன இலாகாக் குரிய காணியாக இருந் தாலும் அந்தக் காணி ககளை அமைச்சுடன் கதைத்து விவசாயம் செய்வதற்குரிய ☞8

## மேன்முறையீட்டு நீதிமன்றில் சரணடைந்த சனத் நிஷாந்த

### கடும் எச்சரிக்கையின் பின் விடுவிப்பு



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் இன்று காலை பிடியாணை பிறப்பிக்கப் பட்டதை அடுத்து, அவர் இன்று பகல் நீதிமன் றில் சரணடைந்தார்.

இராஜாங்க அமைச் சர் சார்பில் முன்னிலை யையான சட்டத்தரணி, பிறப்பிக்கப்பட்ட பிடியா ணையை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி மனு வொன்றைத் தாக்கல் ☞8

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்

# தமிழ் மக்களுக்காகத் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் பின்லாந்து

### கஜேந்திரன் எம்.பிடம் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் உறுதி



இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலையை மே ம்படுத்த பின்லாந்து தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுக்கும் என்று அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் உறுதியளித் தார்.

-இவ்வாறு தமிழ்த் தேசிய ம க்கள் முன்னணியின் நாடாளும ன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச்செயலாளருமான செல் வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

சர்வதேச இராஜதந்திர கவுன்சில் ஏற்பாட்டில் ☞2

# எதிரணி ஒப்பாரி வைப்பதால் நன்மை எதுவுமே கிடைக்காது

### எந்தத் தேர்தல் நடந்தாலும் ‘மொட்டு’வே வெற்றிவாகை சூடும் என்கிறார் பிரசன்ன

நாட்டில் எந்தத் தேர்தல் நடந்தாலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தான் வெற்றியடையும். தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று எதிரணியினர் ஒப்பாரி வைப்பதால் அவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. ☞8



## 7 வயது மகளை சீரழித்த தந்தை

### சாவகச்சேரியில் கொடூரம்

யாழ்., சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தந்தையால் 7 வயது மகள் ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். ☞2

## ஹெரோய்ன் விற்றவர் தாவடியில் சிக்கினார்

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமை வாக தாவடி தெற்குப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்ட இளை ஞர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபரிடமி ருந்து 80 மில்லி கிராம் உயிர் கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருள் ☞2

## 3 மரம் அரியும் ஆலைகள் அதிகாலை தீயில் நாசம்!

### பெரியநீலாவணையில் சம்பவம்



மரம் அரியும் ஆலையில் ஏற்பட்ட தீ விபத்து ☞8

# சொல்ஹெய்ம் – கூட்டமைப்பு கொழும்பில் முக்கிய சந்திப்பு

### அரசியல், பொருளாதாரம் தொடர்பில் பேச்சு



நோர்வேயின் முன்னாள் அமைச் சரும் இலங்கைக் கான முன்னாள் சமாதான தூதுவ ருமான எரிக் சொல் ஹெய்ம், கொழும் பில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப் பினரைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார். ☞2

## அடங்காவிடின் அடக்குவோம்!

### போராட்டக்காரர்களுக்கு ஜோன்ஸ்டன் எச்சரிக்கை



அரசுக்கு எதிரான போராட் டக்காரர்கள் தாமாகவே அடங்க வேண்டும். இல்லையேல் அவர்களை அரசு அடக்கியே தீரும்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்தார். ☞2

## அரச அடக்குமுறைக்கு முடிவு கட்டுவர் மக்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் பதிலடி



இளைய தலைமுறையின் ஒன்றிணைவுகளுக்குப் பயப் படும் கோழைத்தனமான அரசே ‘ரணில் – ராஜபக்ஷ’ அரசு என்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக் கும்போது சாடினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

பாதுகாப்புப் படையினர் புடை சூழ்ந்து, ஆயுதமேந்தி ☞8

## கிழக்குக் கடலில் காணாமல்போன மீனவர்கள் 4 பேரும் பத்திரமாக மீட்பு



கடந்த இரண்டு வாரங்களாக, மீன் பிடிக்கச் சென்று திசை மாறி காணாமல் போனதாகக் கூறப்பட்ட 4 மீனவர்களும் பாது காப்பாக மீட்கப்பட்டுள் ளனர் என்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலை யத்தின் உதவிப் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 7 வயது..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தேகநபரான தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மதுபோதைக்கு அடிமை யானவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

5 நாள்களுக்கு முன்னர் அவர் தனது 7 வயது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்று குறித்த சிறுமியின் பேர்த்தியாரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் 30 வயதான தந்தை கைது செய் யப்பட்டுள்ளார்.

ஆபாச காணொளிகளை வற்புறுத்தி காண்பித்தே அவர் வன்புணர்வில் ஈடுபட்டுள்ளார் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொல்ஹெய்ம்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோரைத்தான் சந்தித்துப் பேசினார் என்று எரிக் சொல்ஹெய்ம் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் பழைய நண்பர்களுமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோருடன் கொழும்பில் சந்தித்து உரையாடியிருந்தேன் என்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அத்துடன், பொருளாதார மீட்சி, பசுமையான அபிவிருத்திகள் மற்றும் அரசியல் சீர்திருத்தம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

## ஐ.நா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்லாந்துக்கு விஜயம் செய்துள்ள அவர் நேற்று பின்லாந்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் பெக்கா காவிஸ்தோ உட்பட அரசின் முக்கிய பிரமுகர்களையும், வெளிநாட்டமைச்சின் கொள்கை வகுப் புப் பிரிவு அதிகாரிகளையும், ஆசிய அமெரிக்கப் பிரதிநிதிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகத்தில் எமது மக்கள் படும் இன்னல்களையும், இலங்கை அரசின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புகளையும் தெளிவாக அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்.

தாயகத்தில் தமிழ் மக்கள் படும் துன்பங்கள் பின்லாந்து அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது. தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை மேம்படுத்த பின்லாந்து, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தனது தெளிவான அழுத்தங்களைக் கொடுக்கும் என அவர்கள் எமக்கு இதன்போது தெரிவித்தனர்.

அத்துடன், மனித உரிமை மேம்பாட்டு விடயங்கள் சார்ந்து பணியாற்றும் முக்கியமான அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன். அவர்களும் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக் கப்பட்ட இன அழிப்புக்கு நீதி கோரி சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்கள்.

இந்தச் சந்திப்புக்களில் சர்வதேச இராஜதந்திர கவுன்சிலின் பின்லாந்து பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் -என்றார்.

## கிழக்குக்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம், கல்முனையில் இருந்து கடந்த செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்ற 4 மீனவர்கள் 15 நாட்கள் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை என்ற விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் இன்று கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காணாமல்போன மீனவர்கள் அனைவரும் தற்போது மீட்கப்பட்டு சொந்த இடத்துக்கு அழைத்து வரப்பட் டுள்ளனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக் குட்பட்ட கடற்பரப்பில் இருந்து கடந்த 26.09.2022 அன்று மாலை புறப்பட்டுச் சென்ற 4 மீனவர்கள் குறித்து நேற்று வரை எந்தத் தகவலும் கிடைக்காமல் இருந்தது. இது குறித்து ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

கல்முனையைச் சேர்ந்த எம்.ஐ.எம் மஜிட் (வயது 55), சி.எஸ்.எச்.எம் நிப்றாஸ் (வயது 36), ஏ.பி. கபீர் (வயது 50), எம்.என். ஹில்மி (வயது 33) ஆகிய மீனவர்களே படகில் பயணம் செய்து காணாமல்போய் இருந்தனர்.

அவர்கள் சென்ற படகின் ஜிபிஸ் தொழிநுட்பக் கருவி பழுதடைந்தமையால் திசை மாறி பயணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், திசை மாறி தத்தளித்த படகை மீனவர் ஒருவர் கண்டு கடற்படையினருக்கு அறிவித்துள்ளார். இதற்கமைய மீட்புநடவடிக்கை உள்ளூர் மீனவரின் ஒத்துழைப்புடன் கரைக்குக் காணாமல் சென்ற 4 மீனவர்கள் உள்ளிட்ட படகு வாழைச்சேனை துறைமுகத்துக்கு இன்று இழுத்து வரப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனையின் பின்னர் வீடுகளுக்குச் செல்லவுள்ளனர்.

இந்த மீட்பு நடவடிக்கையின் போது கடற்படை மீன்பிடித் திணைக்களத்தினர், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் படகுகள் சங்கத்தினர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹெரோய்ன்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நீண்டகாலமாக உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்டார் எனவும், வீட்டில் வைத்தும் வியாபார நடவடிக்கையை முன்னெடுத்தார் எனவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள உயிர் கொல்லி ஹெரோய்ன் வியாபாரிகளுடன் இவர் நீண்ட காலமாகத் தொடர்பைப் பேணி வந்தார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

## அடங்காவிடின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷக்களும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியினரும் வீழ்ந்து விட்டார்கள் என்று போராட்டக்காரர்கள் தப்புக்கணக்குப் போடக்கூடாது. நாங் கள் அமைதியாகவே ஒதுங்கி நின்றோம். தொடர்ந்து அமைதி காக்க நாங்கள் தயார் இல்லை. எம்மைச் சீண்டுவோ ருக்குத் தக்க பதிலடி கொடுக்க நாங்கள் தயார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சிதான் இன்னமும் தொடர்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எமது பக்கமே வந்துள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் எமது கூட்டணியைச் சேர்ந்தவரே. அரசுக்கு எதிராகப் போராடுவோர் உண்மையான போராட்டக்காரர்கள் அல்லர். அவர்கள் கொடிய வன்முறையாளர்கள். அவர்கள் கடந்த மே 9 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்களின் வீடுகளை எரித்து தங்கள் காடைத்தனத்தை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் மறைமுக ஆதரவுடனும், வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங் களின் பண உதவியுடனும்தான் அரசுக்கு எதிராக அவர்கள் போராடு கின்றனர்.

இந்தப் போராட்டக்காரர்கள் தாமாகவே அடங்கவேண்டும். இல்லையேல் அவர்களை அரசு அடக்கியே தீரும் – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிள்ளைகளுடன் போராட்டம்

மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும் விதத்தில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்றே தோன்று கின்றது.

மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் குழந்தைகள், சிறுவர்களுடன் பங்குபற்றும் பெற்றோரை விடுத லைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னெடுத் தார் என்று கூறப்படும் சிறுவர் படையணியுடன் ஒப்பிட்டுப் பேசியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சமூகத்தின் மேல் தட்டு வர்க்கத்தின் பிரதிநிதியான அவருக்கு மக்களின் வாழ்வியல் போராட்டத் திற்கான எழுச்சி பெரும் அரசியல் பதவிகளுக்கான நடவடிக்கைகள் போன்று மட்டும்தான் படுகின்றது போலும்.

ஆட்சிப் பீடங்களை அலங்கரித்து நிற்கும் ராஜ பக்ஷக்கள், சேனநாயக்காக்கள், பண்டாரநாயக் காக்கள், விக்கிரமசிங்காக்களின் பதவிப் போராட்டத் திற்கான அரசியல் சில்லெடுப்பு நட வடிக்கைகளாக மட்டுமே இவை மேல் தட்டு வர்க்கத்தினருக்கு படும். அந்தக்கோணத்திலிருந்துதான் அவர்கள் பார்ப்பார்கள். ஜனாதிபதி ரணிலின் பார்வை யும் அத்தகையதுதான்.

ஆனால் போராட்டத்தில் ஈடுபடும் கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கும் கீழ்மட்ட அப்பாவி பொதுமக்களின் பிரச்சினை அதுவன்று. ஒரு நேர வயிற்றுப் பாட்டுக்கான வாழ்வியல் போராட்டத்தின் பிரதிபலிப்பு அது. அடுத்த மூன்று வேளைக் கஞ்சியைப் பெறு வதையாவது உறுதிப்படுத்த வேண்டும் என்ற ஆவேசத்தில், நெருக் கடியில், கஷ்டத்தில், ஏழ்மையில், ஆதங்கத்தில் வீதிக்கு இறங்கும் தாய் பிள்ளையைப் பார்த்துக் கொள்ள வீட்டில் சம்பளத்துக்கு ஆயாவைப் பிடித்து வைத்து விட்டு வர முடியாது. பல இளம் தாய்மார் கொழுந்து பறிப்பது உட்பட பல வேலைகளுக்கு இடுப் பில் குழந்தைகளைக் கட்டிக்கொண்டுதான் செல்கின்றார்கள். அப்படிச் சென்று ஏதேனும் நான்கு காசு சம்பாதித்தால்தான் அவர்கள் வீட்டில் அடுப்பெரியும். பிள்ளைக்குப் பால் கொடுக்க முலையில் பால் சுரக்கும்.

இருப்புக்காக – வாழ்வியலுக்காக – வீதிக்கு இறங் கும் அந்த அன்றாடம் காய்ச்சிகள், பிள்ளையை வேறு யாரிடமாவது பார்க்கக் கொடுக்கும் வசதியில் இருந்தால் போராடக் கூட முன்வரும் அவலம் நேர்ந் திராது. கைப்பிள்ளையை வைத்திருக்கும் பெற்றோர் கூட குழந்தையுடன் வீதிக்கு இறங்கி போராடுவதை தவிர வேறு வழியில்லை என்ற கட்டாயத்தை ஏற்படுத்தி யமைக்காக இவ்விடயத்தில் அரசு தன்னைத்தான் நோக வேண்டுமே தவிர – அரசுதான் வெட்கப்பட வேண்டுமே தவிர – போராடும் பெற்றோரை அச்சுறுத் துவதில் அர்த்தமில்லை என்பதைக் கூறி வைக்க விரும்புகிறோம்.

இலங்கையைத் தொடர்ந்து ஆண்டு வந்த சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகள் தமிழர் தாயகத்தில் தொடுத்த காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தினால் பெற்றோரையும் உறவுகளையும் இழந்து நிர்க்கதியான பல்லாயிரம் அப்பாவி தமிழ்ச் சிறார்கள் வேறு வழிகளின்றி புலிகளின் நலன்புரி மையங்களில் தஞ்சம் புகுந்தனர். அவர்களைப் புலிகள் பராமரித்தனர். அப்படி சிறாரைப் பாராமரிக்கும் தேவையை ஒரு விடுதலைப் போராட்ட அமைப்புக்குத் தங்கள் கொடூரத்தால் ஏற்படுத்தி விட்டு இப்போது சிறுவர் போராளிகளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றார் அதே நாட்டின் – அர சின் – அதிபர்.

அவர்களை அப்படி உருவாக்கியதே தங்களின் சிங்கள அரசுகள்தான் என்பதை மறந்து பேசுகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட கணவரைத் தேடும் இளம் மனைவி தன் பிள்ளைகளை ஆயா வைத்து வீட்டில் பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டு, கணவருக்காக வீதியில் இறங்கிப் போராட முடியாது என்ற சின்ன விடயம் கூட நாட்டின் அதிபர் போன் றோருக்குத் தெரியாமல் இருப்பது வியப்புத்தான்.



# யாழ். கொக்குவில் பிரம்படி படுகொலை நினைவேந்தல்!

யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படி பகுதி யில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 35 ஆவது நினை வேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக ஆடியபாதம் வீதி , பிரம்படியில் அமைந்துள்ள நினைவு தூபி முன்பாக நேற்று (புதன்கிழமை) நினைவேந்தல் நிகழ் வுகள் இடம்பெற்றன.

படுகொலையானவர்களின் உறவுகள் நினைவேந்தலில் கலந்து கொண்டு உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட 'ஒப்பரேசன் பவன்' நடவடிக்கை மூலம் அப் பகுதியை சேர்ந்த சுமார் 50 இற்கும் மேற்பட் டோரை இந்திய இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போனோரின் உறவினர்களிடம் மட்டக்களப்பில் விசாரணைகள் ஆரம்பம்!



காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் மட்டக்களப்பு காணாமல் போனோ ரின் உறவினர்களிடம் விசாரணை களை நேற்று (புதன்கிழமை) மேற்கொண்டுள்ளனர்.

மண்முனை தென் எருவில் பற்று, களு வாஞ்சிகுடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த விசாரணையில் கொழும்பிலிருந்தும் மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இதன்போது காணாமல்போனோர் பற் றிய அலுவலகத்தால் கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் கலந்து கொண்டு தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

மாவட்டத்தில் மொத்தமாக 450 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடி, மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் 5 நாள்கள் இவ் வாறு காணாமல்போன உறவினர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போனவர்களின் உறவினர் கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு இணங்க அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலலகம் பரிந்துரை செய்யும் எனவும் இதன்போது அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னாரில் நடந்தது!

மன்னார் மாவட்டத்தில் 2022 - 2023 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பான விசேட கூட்டம் நேற்று (புதன்கிழமை) காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் தலைமையில் உயிலங்குளத்தில் அமைந் துள்ள கட்டுக்கரை குளத்திட்ட விவசாயக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதலாவது நீர் விநி யோகம் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் இறுதி திகதியாக எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கால்நடை பராமரிப்பு தொடர் பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதன் அடிப்படையில் கால் நடைகளை இம்முறை தேத்தாவடி மற்றும் கட்டுக்கரையின் மேல் பகுதி புல்லறுத்தான் கண்டல்-மேய்ச் சல் தரை போன்ற இடங்களில் பட்டி அடைத்து பராமரிக்கும் படி கால்நடை பண்ணை யாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் விதை நெல், உர மானியம், விவசாயிகளுக்கு காப்புறுதிகள், விவசா யிகள் எதிர்கொள்ளும் கால்நடைகளின் தாக்கம் போன்ற பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பாக பல்வேறு விடயங்கள் ஆராயப் பட்டதுடன், மறு உணவுப் பயிர்கள் தொடர்பா கவும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையா ளர், விவசாயத் திணைக்கள பணிப்பாளர், மாவட்ட விவசாய பிரதி பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கம நல சேவைகள் திணைக்களத்தின் அதி காரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள அதி காரிகள், வங்கி முகாமையாளர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் விவசா யிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வெனிசுலாவில் தொடரும் கனமழை, நிலச்சரிவு; உயிரிழப்பு எண்ணிக்கை நூறைத் தாண்டுகிறது




தென் அமெரிக்காவில் அமைந்துள்ள வெனிசுலாவில் பல்வேறு மாகாணங்களில் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, அந்நாட்டின் லாஸ் தெஜேரியாஸ் மாகாணத்தை ஜூலியா புயல் தாக்கியது. கனமழை மற்றும் புயல் காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேலும், பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்நிலையில் வெனிசுலாவின் மத்திய மாகாணமான அரகுவாவில் கனமழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது. கனமழை, வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 60 பேர் மாயமான நிலையில் அவர்களை தேடும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்தச் சூழலில் அரகுவா மாநிலத்தில் உள்ள லாஸ் டெஜெரியாஸ் நகரில் நிலச்சரிவு மற்றும் கனமழையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளதாகவும், அது நூறை தாண்டும் என அஞ்சப்படுவதாகவும் வெனிசுலாவின் துணை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்தை அடுத்து ஜேர்மனியிலும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம்!

## பொருள்கள், எரிபொருள் விலை சடுதியாக உயர்வு




பெர்லின்,ஒக்.13

ரஷ்யா மீது சர்வதேச நாடுகள் விதித்துள்ள பொருளாதார தடை காரணமாக சர்வதேச அளவில் மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இதனால் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ரஷ்யாவிடம் எரிவாயு இறக்குமதியை நம்பி இருந்த நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இங்கிலாந்தில் பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. ஜெர்மனியின் நுகர்வோர் விலை குறியீடு செப்டம்பர் மாதத்தில் கடந்த ஆண்டின் இதே காலத்தில் இருந்ததை விட பத்து வீத உயர்ந்துள்ளது. இது ஜேர்மனியில் 1951 ஆம் ஆண்டுக்கு பிறகு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பணவீக்கம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் உள்ள நாடாளுமன்ற கீழ்சபை கட்டடத்திற்கு வெளியே ஜேர்மனியின் எதிர்கட்சி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# உகண்டாவில் மீண்டும் அதிகரிக்கும் எபோலா நோய்த்தொற்றுத் தாக்கம்!

கம்பாலா, ஒக்.13

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான உகாண்டாவில் எபோலா நோய்த்தொற்று பரவல் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு சில தினங்களுக்கு முன் அறிவித்துள்ளது. உகாண்டாவில் இதற்கு முன் கடந்த 2000 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் எபோலா பரவல் ஏற்பட்டது. அதன் பிறகு தற்போது அங்கு மீண்டும் எபோலா நோய் பரவல் ஏற்பட்டுள்ளது.

தற்போது உகாண்டாவில் எபோலா பாதிப்பிற்கு ஆளாகியுள்ள நபர்களுக்கு, எபோலா வைரஸின் 6 வகைகளில் ஒன்றான 'சூடான் வகை எபோலா' தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எபோலா வைரஸுக்கு எதிராக பயன்படுத்தப்படும் 'எர்பெவோ' தடுப்பூசியை சூடான் வகை எபோலாவிற்கு பயன்படுத்த முடியாது என்றுகூறப்படுகிறது.

இந்த நிலையில் உகாண்டாவின் அண்டை நாடுகளில் ஒன்றான சூடானில் எபோலா நோய் தடுப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு இதுவரை 5 பேருக்கு எபோலா அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். அதே போல் உகாண்டாவின் மற்றொரு அண்டை நாடான காங்கோவின் எல்லை பகுதிகளில், சிலருக்கு எபோலா நோய் தொற்று அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனையடுத்து அண்டை நாடுகளில் இருந்து வருபவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகளை தீவிரப்படுத்த கொங்கோ அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

# ஐரோப்பாவில் மீள கொரோனா அலை? உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை!



ஐரோப்பாவில் பரவலாக கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அங்கு மற்றொரு கொரோனா அலை தொடங்கியிருக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பா தலைவர் ஹான்ஸ் க்ளுக் மற்றும் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஐரோப்பிய மையத்தின் இயக்குனர் ஆண்ட்ரியா அம்மோன் ஆகியோர் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்தக் கூட்டறிக்கையில் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த சூழ்நிலையில் நாம் தற்போது இல்லை என்றாலும், கொரோனா தொற்று நோய் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பது தெளிவாகிறது. துரதிர்ஷ்டவசமாக ஐரோப்பாவில் கொரோனா எண்ணிக்கை மீண்டும் உயர்ந்து வருகிறது. இது மற்றொரு தொற்றுநோய் அலை தொடங்கியுள்ளதை கூறுகிறது. ஐரோப்பா முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி போடாமல் உள்ளனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஐ.நாவில் ரஷ்யாவைக் கண்டித்து நிறைவேறிய தீர்மானத்தில் இந்தியா வாக்களிக்கவில்லை!



நியூயார்க்,ஒக்.13

உக்ரைன் பிராந்தியங்களை ரஷ்யா இணைத்துக் கொண்டதற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஐ.நா.சபையில் நிறைவேறியது. உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் போரைத் தொடங்கிய நிலையில் 8 மாதங்கள் ஆகியும் போர் முடிவில்லாமல் நீண்டு வருகிறது.

இதனிடையே, போரில் உக்ரைனிடம் இருந்து ஆக்கிரமித்த லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய 4 பிராந்தியங்களை தன்னுடன் இணைத்து கொள்ள திட்டமிட்ட ரஷ்யா, இதுதொடர்பாக பொது வாக்கெடுப்பை நடத்தியது. பின்னர் இந்த பொது வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதாக கூறி அந்த 4 பிராந்தியங்களையும் ரஷ்யா தன்னுடன் இணைத்து கொண்டது.

ஆனால் இது சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என உலக நாடுகள் கண்டித்தன. இந்த நிலையில் உக்ரைனின் 4 பிராந்தியங்களை ரஷ்யா இணைத்ததை கண்டித்து ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட திட்டமிடப்பட்டது. இதன்படி ரஷ்யாவைக் கண்டிக்கும் இந்த தீர்மானத்தின் மீது நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த நிலையில், இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 143 நாடுகளும் எதிராக 5 நாடுகளும் வாக்களித்துள்ளன. மேலும் இந்தியா உள்பட 35 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளன.

முன்னதாக இந்தப் பிரேரணையின் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ரஷ்யா ஐக்கிய நாடுகள் சபையில் கோரிக்கை வைத்தது. ரஷ்யாவின் இந்தக் கோரிக்கையை ஏற்பதா? வேண்டாமா? என ஐ.நா. சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் இந்தியா உள்பட 107 ஐ.நா. உறுப்பு நாடுகள் ரஷ்யா வுக்கு எதிராக வாக்களித்தன. இதனால் ரஷ்யாவின் இரகசிய வாக்கெடுப்பு கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலைக்கு 8 லட்சம் ரூபா அறிவிக்கப்பட்ட நக்சலைட் பெண் போராளி தாமே சரண்!



ராய்ப்பூர்,ஒக்.13

சத்தீஷ்காரில் தலைக்கு ரூ.8 லட்சம் அறிவிக்கப்பட்ட நக்சலைட் பெண் போராளி பொலிஸார் முன் சரணடைந்து உள்ளார்.

சத்தீஷ்காரில் சுக்மா உள்ளிட்ட மாவட்டங்களில் நக்சலைட்டுகளின் ஆதிக்கம் பரவலாக காணப்படுகிறது. அவர்கள், அரசியல்வாதிகள், முக்கிய பிரமுகர்களை இலக்காக கொண்டு தாக்குதல், கடத்தல் போன்றவற்றை நடத்தி வருகின்றனர். இதுதவிர, பொலிஸாருடனான மோதலிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரசுக்கு எதிரான வன்முறை செயல்களிலும் ஈடுபட்டு பொதுமக்கள், போலீசார் மற்றும் அரசியல்வாதிகள் என பல உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நக்சலைட்டுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பல நடவடிக்கைகளை சத்தீஷ்கார் பொல்ஸ் எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக நக்சலைட்டுகள் பற்றிய தகவல் அளிப்பவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று பொலிஸார் அறிவித்து வருகின்றனர். இதன்படி, சத்தீஷ்காரில் பெண் நக்சலைட்டாக செயல்பட்ட புஜ்ஜி என்ற ஜனனி பற்றி தகவல் அளிப்போருக்கு ரூ.8 லட்சம் பரிசு வழங்கப்படும் என சத்தீஷ்கார் பொலிஸார் அறிவித்தனர். இந்தச் சூழலில் அதனை தவிர்க்கும் வகையில், ஜனனி என்ற அந்த பெண் நக்சலைட், கேங்கர் மாவட்டத்தில் அந்தகார் பகுதியில் உள்ள பொலிஸில் நேரில் சென்று சரணடைந்து உள்ளார்.

நக்சலைட்டான இவரது கணவரும் கடந்த செப்டம்பர் 27 ஆம் திகதி பொலிஸில் சரணடைந்து உள்ளார். பொலிஸில் தாமாகவே சரண் அடைந்தமைக்காக ரூ.10 ஆயிரம் பொலிஸார் தரப்பில் இருந்து பரிசாக ஜனனிக்கு வழங்கப்பட்டு உள்ளது என சத்தீஷ்கார் பொலிஸார் கூறியுள்ளனர்.

## நயன்தாரா 'அம்மாவான' விவகாரம்; விசாரணை குழு அமைக்க அனுமதி

### உயர்மட்டத் தலையீடு அதிகமாம்



சென்னை,ஒக்.13

திருமணமான நான்கு மாதங்களில், நடிகை நயன்தாரா 'அம்மா' ஆனவிவகாரத்தில், விதிமுறைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய, டி.எம்.எஸ். அமைப்பு தலைமையில் குழு அமைக்க, மக்கள் நல்வாழ்வு துறை செயலர் அனுமதி அளித்துள்ளார்.

நடிகை நயன்தாரா, இயக்குனர் விக்னேஷ் சிவனுக்கு, இந்தாண்டு ஜூன் 9 இல் திருமணம் நடந்தது. நான்கு மாதத்திலேயே, தங்களுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன என, இம்மாதம் 9 ஆம் திகதி விக்னேஷ் சிவன், சமூக வலைதளத்தில் பதிவிட்டார்.

வாடகைத் தாய் வாயிலாக குழந்தைகள் பிறந்தன எனத் தகவல் வெளியானது. இதுகுறித்து விசாரணை நடத்தப்படும் என மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, டி.எம்.எஸ். எனப்படும் மருத்துவம் மற்றும் ஊரக பணிகள் இயக்க அதிகாரிகள் நேற்று ஆலோசனை நடத்தினர்.

ஆலோசனைக்குப் பின் அதிகாரிகள் கூறியதாவது:-

நயன்தாரா வாடகைத் தாய் வாயிலாக குழந்தை பெற்றார் என வெளியான தகவல் தொடர்பாக, குழு அமைத்து விசாரணை நடத்த, மக்கள் நல்வாழ்வு துறை செயலர் அனுமதி அளித்துள்ளார்.

இக்குழு, நடிகை நயன்தாரா – விக்னேஷ் சிவன் ஆகியோர் வாடகை தாய் வாயிலாக தான் குழந்தை பெற்றனரா, உரிய விதிமுறையைப் பின்பற்றினரா என்பன குறித்து விசாரிக்கும். தம்பதியிடமும் உரிய விளக்கம் பெறப்படும்.

இந்த விவகாரத்தில் உயர்மட்ட தலையீடு அதிகம் உள்ளது. விசாரணை தொடர்பான தகவல்களை வெளியே கசியவிடக் கூடாது என எங்களுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது. நேரடி விசாரணை நடக்குமா என்பது பற்றி ஏதும் கூற முடியாது. - இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ராஜஸ்தானில் சாலை விபத்துக்களில் இரு தம்பதிகள் உட்பட எண்மர் சாவு

ராஜஸ்தானில் நிகழ்ந்த சாலை விபத்துக்களில் இரு தம்பதிகள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

டெம்போ - டாங்கர் லொறி மோதியதில் கணவன், மனைவி உள்பட மூன்று பேர் பலியாகினர். காரும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலம் டோங்க் மாவட்டத்தில் உள்ள சதர் காவல் நிலையப் பகுதியில் பஸ் ஒன்று பைக் மீது மோதியதில் அதில் வந்து கொண்டிருந்த ராதாகிருஷ்ணன் (வயது 70), அவரது மனைவி சாகுதேவி (65) உள்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

பிகானேர் நகரில் உள்ள கங்காஹர் பகுதியில் நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் டெம்போவும் டாங்கர் லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின். இந்த விபத்தில் டெம்போவில் இருந்த சுந்தர்லால் புரா (வயது 58), அவரது மனைவி ராஜு தேவி (வயது 55) மற்றும் ஜான்வர்லால் புரா (70) ஆகியோர் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதேபோல் ஜுன் ஜுனுவின் சதார் காவல் நிலையப் பகுதியில் நடந்த மற்றொரு விபத்தில், காரும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் உயிரிழந்தனர். இறந்தவர்கள் ராஜ்குமார் (வயது 42) மற்றும் மந்தீப் (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கல்முனையில் வடிகான்கள் துரிதகதியில் துப்புரவுப் பணி






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை–பெரியநீலாவணைப் பகுதியிலுள்ள வடிகான்கள் குப்பைகள் மற்றும் மண்களினால் அடைக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக நிர்வாக இழுபறிகள் காரணமாக துப்பரவு செய்யப்படாமல் இருந்தமையினால் பெரும் தூர்நாற்றம் வீச தொடங்கியமையுடம் மழை நீர் வடிந்தோட முடியாத நிலயும் உருவாகியிருந்தது.

இது தொடர்பில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். அஸ்மியை நேரடியாக சந்தித்து சமூக செயற்பாட்டாளர் இசட்.ஏ. நௌளாட் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய கல்முனை மாநகர ஆணையாளரின் பணிப்புக்கு இணங்க மாநகர ஊழியர்கள், சாரதிகள் இணைந்து வடிகான்களை இரவு, பகலாகத் துப்பரவு செய்யும் பணியை ஆரம்பித்து முன்னெடுத்து வருகின்றனர்.

நடவடிக்கை எடுத்த கல்முனை மாநகர ஆணையாளர், உதவி ஆணையாளர், சுகாதாரப்பிரிவினர், பொறியியல் பிரிவினர் உட்பட மாநகர உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு பொதுமக்கள் நன்றிகளை தெரிவித்து கொண்ட மக்கள் மூடிகள் இடப்படாத வடிகான்களுக்கு மூடிகளை இட துரிதகதியில் நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தை கேட்டுக்கொண்டுமுள்ளனர்.

## மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடுவது முறையான கல்வி மார்க்கமா?

### முப்பெரும் விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் அமீர் கேள்வி





(காரை சகா)

சமகாலத்தில் மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடுகின்றனர் . இது முறையா என்றகேள்விஎழுகின்றது. சுவாமிவிவேகானந்தர் கூறியது போன்று எம்மிடம் இருக்கின்ற ஆற்றல்களை, திறமைகளை ஆசிரியர்கள் வெளிக்கொணர வேண்டும்.அதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

– இவ்வாறு சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய முப்பெரும் விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் தெரிவித்தார்.

அன்னமலை ஸ்ரீ சக்தி வித்த்யாலய முப்பெரும் விழா நேற்று வித்தியாலய அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றபோது அதில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் தின விழா, சிறுவர் தின விழா, முதியோர் தின விழா ஆகிய மூன்று விழாக்களையும் இணைத்து முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது.

விழாவில், பிரதிக் கல்வி பணிப்பாளர்களான திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார், பி.எம்.யசீர் அரபாத் ,உதவி கல்வி பணிப்பாளர்களான வீ.ரீ.சகாதேவராஜா, எச்.நைரூஸ்கான் மற்றும் சமூக ஆர்வலர்களும் பெற்றோர்களும், ஆசிரி–யர்களும்,மாணவர்களும்கலந்துகொண்டார்கள்.

அங்கு சிறப்பம்சமாக இடம்பெற்ற – கொழும்பிலிருந்து வந்த – ஹரி என்பவரின் மாயாஜால வித்தை சிறுவர்களை பெரிதும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

விழாவில் பணிப்பாளர் அமீர் மேலும் கூறியதாவது:–

பெரிய பெரிய பாடசாலைகளிலே பரீட்சை வைத்து 90 அல்லது 100 புள்ளிகளை பெற்றவர்களுக்கு மட்டுமே இடம் வழங்குகிறார்கள். இது சரியா? இதுவும் இன்று கேள்வியாகிறது. உண்மையிலேயே படிக்காதவர்களை படிக்க வைக்கும் இடம்தான் பாடசாலை என்பதை நாங்கள் மறந்து விட முடியாது. நோயில்லாதவருக்குத்தான் வைத்தியம் பார்ப்பேன் என்று ஒரு வைத்தியர் கூற முடியாது .எனவே நாங்கள் அதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

இப் பாடசாலை அதிபர் பொன்.பாரதிதாசன் இந்த சமூகத்தை உள்வாங்கி இருக்கின்றார். இதுதான் அவரது வெற்றி .சிறுவர்கள் உரிமைகளை மட்டும் பேசாது எமது கடமைகளையும் பேச வேண்டும். இன்றைய இளைஞர் மத்தியில் போதைப்பொருள் பாவனை, ஆபாச சிந்தனைகள் மோசமாக பீடித்துக் கொண்டிருக்கின்றன. இவை பாடசாலை மாணவர்களிடத்திலும் பரவ ஆரம்பித்திருக்கின்றன. எனவே பெற்றோர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் இதில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும் என்றார்.

பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். பாடசாலைக்கு உதவி செய்தவர்கள் கல்வி சமுகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

பாடசாலையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்களை அன்னமலை தனவந்தர்கள் அன்பளிப்பு செய்தார்கள்.

## மட்டு. மாநகர அபிவிருத்திக்கான உலக வங்கி உதவி பற்றி ஆய்வு

### உள்ளூர் அபிவிருத்தி வேலைத்திட்ட மதிப்பீடு




(க.கிருபாகரன்)

உலக வங்கியின் நிதி அனுசரணையில் உள்ளூர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பொருளாதாரத்தை மீளமைத்துக் கொள்வதற்கான பங்களிப்பைச் செய்யும் வகையில் எதிர்கால செயற்திட்டங்களை வடிவமைத்துக் கொள்வது சம்பந்தமாகவும் மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை ஆய்வுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்தல், உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தல், உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை விரிவுபடுத்தல் போன்ற பொதுவான தலைப்புக்களில் விரிவுரைகள் தெளிவூட்டல்கள் வங்கப்பட்டன. குழுக் கந்துரையாடல்களும், ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் த.சத்தியசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# அரசாங்கத்தின் நலத்திட்ட உதவிகளுக்கு இதுவரையில் 23 லட்சம் விண்ணப்பங்கள்!

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன்புரி உதவிகள் வழங்கும் துரித வேலைத்திட்டத்துக்கு நேற்று (புதன்கிழமை) வரை 23 லட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகன என நலன்புரி பலன்கள் சபை தெரிவித்துள்ளது.

'எவரையும் கைவிடாதீர்கள்' என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் 6 இலட்சத்து 24 ஆயிரத்து 714 விண்ணப்பங்கள் இன்று வரை தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள 341 பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள நலன்புரி உதவித் தகவல் அலகுகள் மூலம் அனைத்து விண்ணப்பங்களும் உடனடியாக இத்தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்படும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கான முன்னோடி திட்டம் அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலகங்களை மையமாகக் கொண்டு இடம் பெற்றதுடன் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது நலன்புரித்திட்ட உதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் அல்லது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 33 லட்சம் குடும்பங்களுக்கு மேலதிகமாக, 6 லட்சம் குடும்பங்கள் கொவிட் இரண்டாம் அலை மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாகப் புதிதாகக் குறைவருமான நிலையை அடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த 6 லட்சம் குடும்பங்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி இந்த சமூக நலத்திட்டத்துக்கு 39 லட்சம் குடும்பங்கள் விண்ணப்பிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

39லட்சம்குறைந்தவருமானம்பெறும்குடும்பங்கள் இந்த திட்டத்தின் கீழ் நலன்புரி உதவிகளைப் பெறவுள்ளன. 6 கட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையின் போதே, இரண்டாம் கட்டப் பணிகளும் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அடுத்த கட்டமாக வீட்டு அலகுகளுக்குச் சென்று தரவுகளை சேகரிக்கவுள்ளதாகவும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

சமுர்த்தி, முதியோர், மாற்றுத்திறனாளிகள், சிறுநீர நோயாளிகள் என்ற அடிப்படையில் ஏற்கனவே நலன்புரி உதவிகள் பெற்று வருபவர்களும் புதிதாக நலத்திட்ட உதவிகள் பெற விரும்புவோரும் இதில் பதிவு செய்ய வேண்டும்.

அதற்காக பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் 30.08.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளதோடு, 29.09.2022 வரை தரவுக் கட்டமைப்பில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை நெருங்கியுள்ளன.

எனினும் அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட பிரசாரப் பணிகள் காரணமாக 23 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன எனக் குறிப்பிடும் நலன்புரி நன்மைகள் சபை விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி ஒக்ரோபர் 15 எனவும் நினைவு கூர்ந்துள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் டிசெம்பர் 15ஆம் திகதி பிரதேச செயலக மட்டத்தில் அறிவிக்கப்படும் எனவும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.




## கியூபா -இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவு குறித்து விவாதிப்பு!

இலங்கைக்கான கியூபா தூதுவர் அன்ரஸ் கொன்சாலி கரிடோ நேற்று (புதன்கிழமை) வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தார்.

இருவருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

அமைச்சர் சப்ரி மற்றும் தூதுவர் கரிடோ இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நலன்கள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாகப் பல விடயங்கள் பற்றி விவாதித்துள்ளனர்.

## மியன்மாரினால் இலங்கைக்கு 1000 மெற்றிக் தொன் அரிசி




மியன்மார் அரசாங்கத்தால் இலங்கைக்கு 1000 மெற்றிக் தொன் அரிசி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இலங்கை - மியன்மார் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான மியன்மார் தூதுவர் யு ஹான் து, வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனிடம் அரிசியை கையளித்தார்.

# மட்டு. கரடியனாறு, பலிபாய்ந்தகல் பகுதிகளில் ரி56 ரகத் துப்பாக்கி, வெடிப்பொருட்கள் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு மற்றும் சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன புல்லுமலையில் புதைத்து வைக்கப்பட்ட வெடிமருந்துக்களையும் புலிபாய்ந்தகல் காடுப்பகுதியில் இருந்து ரி 56 ரக துப்பாக்கி ஒன்று மற்றும் அதற்கான ரவைகளையும் நேற்று புதன்கிழமை மாலை விசேட அதிரடிப்படையினரும் பொலிசாரும் மீட்டுள்ளனர் என அந்தந்தப் பொலிஸ் நிலைய பொலிசார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள கோரவெளி காட்டுப் பகுதியில் நேற்று மாலை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வு பிரிவினர் குறிப்பிட்ட காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி 56 ரக துப்பாக்கி ஒன்றையும் 8 ரவைகளையும் மீட்டனர்.

இதேவேளை கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன புல்லுமலை வயல்பகுதியில் டிராக்டர் இயந்திரத்தால் வயலை உழுதபோது பரல் ஒன்றின் மூடி வெளியே வந்ததையடுத்து நிலத்தை தோண்டியபோது நிலத்தில் புதைத்துவைக்கப்பட்ட பரல் ஒன்றில் வெடிபொருள்கள் இருப்பதைக் கண்டு பொலிசாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்துப் பொலிசார் பரலில் இருந்த பாதுகாப்பாக பொலித்தீனில் சுற்றப்பட்ட பெருமளவிலான வெடி மருந்துக்களை மீட்டுள்ளனர்.

இந்த பகுதி முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

மீட்கப்பட்ட வெடி மருந்துக்களை நீதிமன்ற உத்தரவைப் பெற்று செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக கரடியனாறு பொலிசார் தெரிவித்தனர்.

## 3 மரம் அரியும்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக மூன்று மர ஆலைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள 3 மர ஆலைகள் உள்ளிட்ட களஞ்சியசாலைகள் இவ்வாறு இன்று அதிகாலை தீ காரணமாக நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்துக்குச் சென்ற கல்முனை மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அரச அடக்கு.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியாகப் போராடும் இளைஞர்களைக் கேவலமான முறையில் ஒடுக்குகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

போராடும் இளைஞர்கள் மனித குலத்தின் பசி வேதனைகள் குறித்துக் கூட அற்பமேனும் பொருட்படுத்துவதில்லை. வன்முறை மற்றும் அரச மிலேச்சத்தனம் அவர்களுக்கு அன்றிலிருந்தே பரிச்சயமானது. இந்த மிலேச்சத்தனத்துக்கு எதிராக நாம் எழுந்து நிற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி நாடு முழுவதும் சென்று தொகுதி தொகுதியாக ஒழுங்கமைத்து இலட்சக்கணக்கானோருடன் விரைவில் கொழும்புக்கு வந்து ஜனநாயகத்தை வென்றெடுக்கத் தயாராகவுள்ளது. அரசு முடிந்தால் அடக்குமுறையைத் தொடரட்டும் என்றும் அவர் சவால் விட்டார்.

அரச அடக்குமுறையும், வன்முறையும் மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மேன்முறை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன் நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இராஜாங்க அமைச்சர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

இராஜாங்க அமைச்சர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, விண்ணப்பங்கள் தொடர்பில் அழைப்பாணை பெறவில்லை என்று நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

எவ்வாறாயினும், நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணை பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டது என்று மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மற்றும் உபுல் ஜயசூரிய பிசி மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

நீதித்துறையைக் குறிவைத்து அண்மையில் வெளியிட்ட அவமதிப்புக் கருத்து தொடர்பில் சனத் நிந்தவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ஏன் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுவதற்காக நேரில் முன்னிலையாகுமாறு இராஜாங்க அமைச்சருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக அழைப்பாணை அனுப்பியிருந்தது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக இராஜாங்க அமைச்சர் சனத் நிந்தவை தண்டிக்க உத்தரவிடுமாறு கோரி நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதிவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான இலங்கை நீதிச் சேவை சங்கம் மற்றும் இரண்டு சட்டத்தரணிகள் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், மூன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தொடர்பில் நீதிமன்றில் இன்று பகல் சரணடைந்ததையடுத்து, இராஜாங்க அமைச்சர் சனத் நிந்தவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

இதையடுத்து, கடும் எச்சரிக்கையில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த விடுவிக்கப்பட்டார்.

## வன இலாகாக்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

உள்ளூர் பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் பொருட்டு கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வவுனியா மாவட்டத்தில் உழுந்து, பயறு செய்கைக்கான விதை தானியங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரப் பாதிப்பால் எமது பகுதி மக்கள் பாதிப்படைந்திருக்கின்றார்கள் என்ற அடிப்படையில் விவசாய மக்களை ஊக்கப்படுத்தும் முகமாக 12 மாவட்ட மக்களுக்கும் உள்ளூர் பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் பொருட்டு விதை தானியங்கள் வழங்கப்படுகின்றன.

அதில் வன்னி மாவட்ட அமைச்சர் என்ற வகையில் அதிகமாக 9 மில்லியன் என்ற அடிப்படையில் நிதி வழங்கப்பட்டுள்ளது. வருகின்ற வருடங்களில் அனை வருக்கும் வழங்கக் கூடிய வகையில் நிதி உதவிகளை கேட்டிருக்கின்றோம். கிடைக்கும் பட்சத்தில் அதனை வழங்க இருக்கின்றோம்.

சிறிய உதவியாக இருப்பினும் குறித்த உதவிகளைப் பெற்றவர்கள் அதனை உரிய முறையில் பயன்படுத்தி நாட்டில் எதிர்பார்க்கப்படுகின்ற உணவுப் பற்றாக்குறையின் தாக்கத்தை நிவர்த்தி செய்யும் வகையில் உங்களது பங்களிப்பு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

எங்களது மாவட்டங்களில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக அண்மையில் வன இலாகா அமைச்சருடன் கதைத்திருந்தோம்.

எமது பகுதிகளில் உள்ள விவசாயப் பயிர்ச்செய்கை, தோட்டபயிர்ச்செய்கைகளில் வன இலாகாவின் பிரச்சினை பாரியளவில் இருக்கின்றது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானம் காணிகளில் பிரச்சினை இருக்கலாம். ஆனால், விவசாய பயிர்ச்செய்கை, தோட்டம் செய்யக்கூடிய காணியாக இருந்தால் அதனை அவர்கள் விவசாயம் மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

அதில் வன இலாகாவினர் இடையூறு விளைவிக்கமாட்டார்கள். அந்த அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அத்தோடு அமைச்சில் இருந்து ஒரு குழு அனுப்புவதற்கு இருக்கின்றார்கள். எந்தக் காணியாக இருந்தாலும் அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் வன இலாகாக்குரிய காணியாக இருந்தாலும் அதனை விவசாயம் செய்யக்கூடிய ஏற்பாடுகளை அமைச்சோடு கதைத்து ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இலங்கையைப் பொறுத்தவரை காடுகள் அதிகமாக இருப்பதாக அதிகாரிகளுக்குத் தெரிவது வடக்கு மாகாணத்தைத்தான். அதிகாரிகளிடம் இருந்து விபரத்தை எடுக்காது சுற்றுநிருபம் வெளியிடப்பட்டதுதான் பிரச்சினை.

2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்காமல் வழங்கப்பட்ட சுற்றுநிருபங்களை நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்திருக்கின்றோம் - என்றார்.

# வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட் அறிமுகம்

## யாழ் விவசாய பீடக் கண்டுபிடிப்பு







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட் பானத்தில் அறிமுக நிகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையினரால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் படி, சேதன முறையில் வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்டுக்கான உற்பத்தி ஒப்பந்தம் கடந்த வருடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லை பாற்பொருள் உற்பத்தி நிலையத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்துக்கமைய உற்பத்தி செய்யப்பட்ட வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்டை சந்தைப் படுத்தும் செயன்முறை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, முல்லை பாற்பொருள் உற்பத்தி நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், ஜெய்கா செயற்றிட்ட அதிகாரிகள், விவசாய பீட அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலுவலகத்தின் பணிப்பாளர், பல்கலைக்கழகப் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

## எதிரணி ஒப்பாரி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

'குறுகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலையோ அல்லது எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க ஜனாதிபதி செயற்பட்டால், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஜனநாயக ரீதியில் அதற்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுக்கத் தயங்கமாட்டோம்' என்று எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலானவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வசமே உள்ளன. தேர்தல் நடந்தாலும் அந்தச் சபைகள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வசமே மீளவும் வரும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மட்டுமல்ல மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் நடந்தாலும் 'மொட்டு'க் கட்சியே வெற்றிவாகை சூடும். ஏன் ஜனாதிபதித் தேர்தல் நடந்தாலும் எமது கட்சியின் வேட்பாளரே அரியணை ஏறுவார்.

தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று எதிரணியினர் ஒப்பாரி வைப்பதால் அவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.

நாடு மீதும், மக்கள் மீதும் அவர்களுக்கு உண்மையான அக்கறை இருந்தால் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க அவர்கள் முன்வர வேண்டும்.

நாட்டின் நிலைமை ஓரளவு சரி வந்த பின்னர் - தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவந்த பின்னர் தேர்தல்களை உரிய காலங்களில் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி உத்தரவு வழங்குவார் -என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2022இல் வெளியிடப்பெற்றது.